தெவிநுவர பிரதேச சபை - 2022

---------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெவிநுவர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தெவிநுவர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான ரூபா 61,870,000 இற்கான பெறுமதியுடைய 07 கட்டிடங்கள் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் பேணப்பட்டு வரும் ரூபா 25,000,000 பெறுமதியான 03 நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெற வேண்டிய வட்டி ரூபா 672,699 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பொதுக் களஞ்சிய இருப்பின் பெறுமதி ரூபா 557,181 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியளவில் கடந்த ஆண்டு சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 06 பல்வேறு நிர்மாண வேலைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய செலவுகளுக்காக நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 555,507 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | முன்னைய ஆண்டின் போது அப்புறப்படுத்தப்பட்டிருந்த ரூபா 476,499 தொகை பெறுமதியான டிரக்டர் டிரேலர் மற்றும் குபோடா டைரக்டர் என்பன மீளாய்வாண்டு இறுதி வரை மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த 02 காணி ஏல விற்பனைகளின் மூலம் பெற வேண்டிய ரூபா 1,258,930 தொகைக்கான 1% கட்டணம் பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 274,000 தொகை தொகைக்கான முத்திரைக் கட்டணம் பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, காணி உறுதிகள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 122,082,889 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 20,240,880 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19,207,364 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பீட்டு வருமானம் | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 2,923,135 | 1,924,480 | 1,380,399 | 5,946,297 | 3,037,238 | 3,351,577 | 3,123,716 | 5,402,216 |
| ii. | வாடகை | 26,036,46 | 4,388,695 | 3,892,244 | 14,640,140 | 26,322,260 | 5,388,161 | 3,030,691 | 14,143,689 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,075,500 | 810,040 | 884,225 | 156,790 | 5,410,350 | 857,453 | 683,228 | 230,975 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 7,314,800 | 1,338,664 | 917,574 | 516,556 | 7,401,000 | 5,049,117 | 4,953,651 | 95,466 |
| | மொத்தம் | 41,349,895 | 8,461,879 | 7,074,442 | 21,259,783 | 42,170,848 | 14,646,308 | 11,791,286 | 19,872,346 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வீதவரி மீதி ரூபா 5,196,765 தொகையாக காணப்பட்டதுடன் வருட இறுதியில் அம் மீதி ரூபா 5,866,493 தொகையாக இருந்தது. | நடமாடும் சேவைகள் மற்றும் விளம்பரப்படுத்தல் அலுவல்கள் மேற்கொண்டு நிலுவையை அறவீடு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று மற்றும் நிலுவை ஆதனங்களுக்காக எழுத்தாணை தயாரித்தல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் செயற்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134 இற்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என 16 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இணங்காணப்பட்டு இலக்கம் 1980 மற்றும் 2016 ஆகஸ்ட் 12 திகதிய வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஜனவரி 30 திகதியளவிலும் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளல் சட்டத்தின் பிரிவு 20 இற்கு இணங்க வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்து வருடாந்தப் பெறுமதி மீது வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 2011 ஆண்டின் வீதவரி ஆதனப் பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவீடு செய்யப்பட்டு வந்தது. | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் வேண்டப்பட்டுள்ளது என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான கடைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 84 வாடகையாளர்களிடம் ரூபா 13,810,794 இற்கான கடையறை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிதிக் குழுவின் தீர்மானத்தின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2023 பெப்ரவரி 02 திகதி அளவில் சபைக்குச் சொந்தமான 04 வர்த்தக தொடர் கட்டிடங்களில் 73 கடையறைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கைகள் நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொள்வதற்காக வாடகையாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,160,790 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 68,528,018 தொகையாக இருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | தெவிநுவர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 05 ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் இருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 149 இற்கு இணங்க கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டில் இந்த ஹோட்டல்களில் இருந்து 1% கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகாரச் சட்டத்தின் படி துணை விதிகள் சட்ட ஆக்கஞ் செய்யப்பட்டு கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் தொடர்பாக தரவுகள் பேணிச் செல்வதற்கும் உக்கக் கூடிய குப்பைகளை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கும் உக்காத குப்பைகளை மீள்சுழற்சிக்கு அனுப்புவதற்காக நிரந்தர மற்றும் முறையான குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்காததுடன், அதற்கு பதிலாக நாளாந்தம் சேகரமாகும் உக்கக் கூடிய குப்பைகளை வெல்லமடம மோலவத்த எனும் தனியார் காணி ஒன்றில் இடப்பட்டு வருகின்றது. | பொருத்தமான காணி ஒன்று கிடைத்த பின்னர் குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்படுகின்றது என. | நிரந்தர மற்றும் முறையான குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | உக்கக் கூடிய குப்பைகளை மற்றும் உக்காத குப்பைகளை கலவை செய்து பாதையின் இரு மருங்கிலும் பொது மக்களால் போடப்படுகின்ற குப்பைகளும் கடலோரத்திற்கு அண்மித்த பொது மக்கள் செரிந்து வாழும் வெல்லமடம் மோலவத்த எனும் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணியில் ஒன்றில் இடப்படுவதினால் குப்பை செயற்களத்திற்கு பொலிதீன் கலந்த குப்பைகள் இடப்பட்டு மண் இடப்பட்டு மூடப்படல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொது மக்களுக்கு அறிவுறுத்தி குப்பைகளை இக் காணியில் போடப்படுவதை குறைக்கப்பட்டுள்ளது என. | நிரந்தர மற்றும் முறைசார் குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான பெக்கோ இயந்திரம் ஒரு முகவர் நிலையத்திற்கு திருத்த வேலை மேற்கொள்வதற்காக ரூபா 692,028 தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், திருத்த வேலைகள் 04 மாதங்கள் தாமதம் அடைந்ததினால் சபையின் நாளாந்த அலுவல்களை மேற்கொள்வதற்காக பெக்கோ இயந்திரம் ஒன்று வாடகைக்கு பெறுவதற்காக ரூபா 617,680 தொகை செலவீடு செய்ய நேரிட்டிருந்தது. | தென் மாகாண இயந்திர பொறியியலாளரின் பரிந்துரை மீது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | வருடாந்தம் நடைபெறும் எசல கடைகளில் தற்காலிக கடைகள் மற்றும் தரைச் சதுரங்கள் விற்பனை செய்யும் செய்முறை மிகவும் முறைசாரற்ற விதத்தில் வெளிப்படைத் தன்மையின்றி பல வருட காலமாக கடைகள் மற்றும் தரைச் சதுரங்கள் விற்பனை செய்யும் போது நேரிட்டிருந்த முறையற்ற தன்மையின் | உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்படும் பரிந்துரைகளின் படி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக ரூபா 981,430 இற்கான தொகையொன்று சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2014 ஒக்தோபர் 13 திகதி பிரதியீட்டு வேலை வெளிக்களத் தொழிலாளர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2020 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 1,244,917 தொகை சம்பளங்கள் மற்றும் படிகளாக சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவரினால் கடமைகள் ஏதும் மேற்கொள்ளப்படுவதில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2023 மார்ச் 20 திகதி வரை பகல் காவல் சேவையில் கடமை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும் 2023 மார்ச் 20 திகதி மேற்கொள்ளப்பட்ட புதிய கடமை சாட்டுதல் அவரினால் இற்றைவரை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை என. | பதவிக்குரிய குறிப்பிட்ட கடமைகள் சாட்டப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுச் செயலாளரின் PR/01/01 இலக்கங் கொண்ட மற்றும் 2010 ஆகஸ்ட் 17 திகதிய சுற்றறிக்கைக்கு இணங்க வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,038,100 இற்கான செலவொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | பொதுமக்களின் கோரிக்கைளுக்கு முக்கியத்துவம் வழங்கி அத்தியவசியமான வீதி விளக்குகள் பொருத்துவதற்கு நேரிடுகின்றமையால் சுற்றறிக்கைக்கு முரணாக செயற்படுவதற்கு நேரிட்டிருந்தது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த நகர எல்லையுள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 கட்டிடங்கள் தொடர்பாக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன் இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் உட்பட்ட 2021 ஜூலை 08 திகதிய 2235/54 இலங்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து ரூபா 6,864,000 இற்கான கட்டணம் அறவீடு செய்து இந் நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஆலோசனை பெறுவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதில் கிடைத்த பின்னர் அதன் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.4 சிக்கல் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெவிநுவர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் மஹஹேன யக்தெஹிகஹஹேன என்ற இடத்தில் வியாபார நடவடிக்கை ஒன்றிற்காக 474 சதுர மீற்றரிற்கான கட்டடம் ஒன்றிற்குரிய விண்ணப்பம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்களிற்கு இணங்க நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் தெவிநுவர பிரதேச சபை தலைவரினால் திட்டமிடல் குழுவிற்கு அனுப்பப்படாமல் போலியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | கட்டிட வரைபு இரத்துச் செய்யப்பட்டது என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தெவிநுவர தல்பாவில பாதைக்கு அண்மித்து அமைந்துள்ள 01 ஏக்கர் 01 ரூட் 34.75 பர்சஸுக்கான நிலஅளவைப் பட இலக்கம் 9142 கொண்ட காணி தனியார் தரப்பினரால் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பம் தொடர்பாக பகிர்வு வரைபு தலைவரினால் போலியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அங்கீகாரம் வழங்குவதற்கு முன்னர் ஆரம்ப வரைபு தீர்வு தொடர்பாக நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 03 கொங்கிரீட் வடிகால்கள் நிர்மாணிக்கும் போது வடிவமைப்புகள் தயாரிக்கப்படாத பகுதி ஒன்றிற்கு வடிவமைப்பு 40.3 சதுர மீற்றருக்காக ரூபா 59,279 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெவிநுவர பிரதேச சபைக்கு தொழிலாளர்கள் என சேர்க்கப்பட்டிருந்த 09 ஊழியர்கள் நிரந்தர சேவை நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கல்விச் சான்றிதழ் 2023 ஜனவரி 31 திகதியளவிலும் குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து உறுதிப்படுத்திக் கொண்டு இருக்கவில்லை. | மூவரின் சான்றிதழ்கள் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் மீதியான சான்றிதழ்கள் உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என. | சான்றிதழ்களை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பின் இணைப்பிற்கு இணங்கள மனித அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | மனித அபிவிருத்தித் திட்டம் ஒன்று இந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | சபையின் 03 வேலை வெளிக்கள தொழிலாளர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர் ஒருவருக்கு பதவிக்குரிய குறிப்பிடப்பட்ட கடமை சாட்டுதல்கள் சாட்டப்படாமல் சம்பளங்கள் மற்றும் படிகள் என 2020 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 5,113,510 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | அவர்களின் திறமைகளை கவனத்தில் எடுத்து புதிய உத்தியோகத்தருடன் அலுவலக விடயங்களின் உதவிக்காக ஈடுபடுத்தப்பட்டது என. | பதவிகளுக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |